1967 ஜூலை 15]

Thiru K. VINAYAKAM: Whereas it is my desire that Mr. Kothandaraman should continue to be a member of the municipal council, is it not a fact that the judgment which was delivered by the District Judge was not based upon his absence from three consecutive meetings of the council but was based upon some other alleged offence which Mr. Kothandaraman has not taken care to take up in revision petition or appeal to the High Court.

The Hon. Thiru C. N. ANNADURAI: Without being posted with all the facts connected with the judgment, I cannot pronounce any opinion.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது என்னோடு பத்து மாணவர்கள் சிறை வைக்கப்பட்டிருந்தனர். அந்த மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுவதாக இருக்கிறது. அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றதால் எங்கும் வேலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கத்தை அணுகினால் அந்த மாணவர்களுக்கு வேலை கிடைக்க தக்க ஏற்பாடு செய்து தருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அவர்கள் எந்த மாணவர்கள்? எந்த வேலைக்குப் போய் மறுக்கப்பட்டது என்ற தகவலை உறுப்பினர் அவர்கள் தந்தால், அதுபற்றி கவனிக்கப்படும்.

Panchayat Board, Chinnalapatti

367 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(*a*) whether it is a fact that the Town Panchayat Board, Chinnalapatti, Madurai district has resolved to raise the rate of House tax from $2\frac{1}{2}$ to $3\frac{3}{4}$ per cent of the rental value of the houses;

(*b*) whether it is a fact that the enhancement was effected on the advice of the Director of Rural Development;

(*c*) whether the Government feel that the enhancement of the house tax up to $3\frac{3}{4}$ per cent is sufficient to run the Panchayat soundly;

(*d*) what is the financial position of the Panchayat Board;

(*e*) whether it is true that the Panchayat Board has been forced to use Police bandobust for its collection drive; and

(*f*) what action the Government have taken on such of the individuals who have instigated the tax payer to refuse payment of house taxes to the Panchayat Board, Chinnalapatti?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இது பரிசீலனையில் உள்ளது.

(எ) முதலீடுகள் உட்பட 17–4–1967 வரை ரொக்க இருப்பு ரூபாய் 25,459·19.

(ஐ) வரி வசூலிக்கச் சென்ற பணியாளர்களின் பாதுகாப்பிற்கென, பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி போலீஸ் உதவியைப் பெற்றார்.

(ஒ) சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தந்த அதிகாரிகள் தகுந்த அறிவுரைகள் வழங்கியுள்ளனர்.

[1967 ஜுலை 15

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து நிர்வாகத்தில் அங்கே இருக்கிற அங்கத்தினர்களுக்குள்ளேயே அரசியல கட்சி வேறுபாடுகள் இருப்பதாலே, ஒரு கட்சி மெஜாரிட்டியாக இருந்து அதை உயர்த்த வேண்டுமென்று உயர்த்தி, மைனரிட்டியாக இருப்பவர்கள் அதை உயர்த்தக் கூடாது என்று சொல்லி, அமுலுக்கு வரும்போது, இரு கட்சிக்காரர்களும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டு, கலவரம் ஏற்பட்டதன் பயனாக, போலீசார்கள் உதவி கொண்டு வரி வசூல் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? பஞ்சாயத்து நிர்வாகத்தில் அரசியல கட்சி அடிப்படையில் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்ற ஒரு நல்ல நியதியை அமைச்சர் அவர்கள்—முதலமைச்சர் அவர்கள்—சில கோட்பாடுகளை உருவாக்கி, ஒரு ஆரோக்கிய அரசியல் உண்டாவதற்கு முயலுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஆரோக்கிய அரசியலில் அக்கறை ஏற்பட்டிருப்பது குறித்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன். பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமல்ல, நகராட்சி மன்றங்களுக்கும் அரசியல் கட்சி அடிப்படையில் தேர்தலுக்கு நிற்க வேண்டாமென்று நாங்கள் சொன்னபோது, கனம் உறுப்பினருடைய தலைவர்கள் தான் அதை மறுத்தார்கள்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : கோடம்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த திரு. கே. விநாயகம் அவர்கள் கோடம்பாக்கத்தைப்பற்றி பார்லிமெண்ட் உப தேர்தல் வருவதனாலே கேள்விபோட்டார்கள். சின்னாளப்பட்டியில் தேர்தல் வருகிறதா ? எதன் காரணமாக இந்தக் கேள்வி போடப்படுகிறது ?

(பதில் இல்லை)

திரு. கரு. சீமைச்சாமி : வீட்டு வரியை உயர்த்துவதற்கு 3 வருஷத்திற்கு ஒரு முறைதான் பரிசீலிக்கவேண்டும். சின்னாளப்பட்டியில் 2 வருஷத்திற்குள்ளாகவே வீட்டு வரியை உயர்த்தியிருப்பதனால்தான் இந்த மாதிரியான குழப்பம் வந்திருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நிதி நிலை சீர்கேடாக இருந்த காரணத்தினால் தல ஆணையாளர் அதைச் சரிக்கட்ட வரிவிதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார். அதை எதிர்த்துத்தான் வழக்கு மன்றத்திற்கு ஒரு சில கட்சிக்காரர்கள் சென்றிருக்கிறார்கள். அதுபற்றிய விவரம் வழக்கு மன்றத்தில் இருப்பதால் மேலும் விளக்கவேண்டாமென்று நினைக்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சின்னாளப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் காங்கிரஸ்காரராக இருப்பதால், காங்கிரஸ்காரர்களுடைய வீடுகளுக்குக் குறைவான வரியும், மாற்றுக் கட்சிக்காரர்களுடைய வீடுகளுக்கு அதிகமான வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது என்கிற புகார் வந்தது உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட கட்சிக் கண்ணோட்டத்தோடு புகார்கள் எதுவும் வரவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : பஞ்சாயத்துகள், நகராட்சிகளில் அரசியலைப் புகுத்தக்கூடாது என்றாலும்கூட சிதம்பரம் பக்கக் காங்கிரஸ்காரர்கள் அவற்றிலே அரசியலைப் புகுத்துவதும், மெம்பர்களையே தூக்குவதுமான காரியங்களில் ஈடுபடுவதுபற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி சின்னாளப்பட்டியைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : சின்னாளப்பட்டி பஞ்சாயத்தில் வரியை உயர்த்தக்கூடாது என்கிற தீர்மானம் வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும்கூட எக்ஸிக்யூடிவ் ஆபீசர் வரியை உயர்த்தி, போலீஸ்காரர்களின் துணைகொண்டு வரி வசூல் செய்தது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நெறியாளர், ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தை மீறி செயல்பட்டதாகக் கருதமுடியாது.

Thiru K. VINAYAKAM : Sir, I rise on a point of order.

நான் கோடம்பாக்கத்தைச் சேர்ந்தவன், கோடம்பாக்கத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நான் மாநிலம் முழுவதற்குமான நன்மையை உத்தேசித்து செயல்பட வேண்டிய பிரதிநிதி இல்லையா ? நான் சின்னுளப் பட்டியைப் பற்றி கேள்வி போடக்கூடாது என்கிற விதி இருக்கிறதா ?

Sir I want your ruling.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நானும் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேறு ஒரு பக்கத்தில் குடியிருந்து கொண்டு நான் கோடம்பாக்கத்துக்காரன், நான் கோடம்பாக்கத்துக் காரன் என்று சொல்லிக்கொள்வது முறைதானு ?

திரு. கே. விஞயகம் : நான் கோடம்பாக்கம் தொகுதியில் இருந்து வெற்றி பெற்று வந்த சமயம்தான் முதல் அமைச்சர் அவர்கள் காஞ்சீபுரம் தொகுதியில் இருந்து வெற்றிபெற்று வந்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அவருடைய திருவல்லிக்கேணி வீட்டில் நான் ஒரு நாள் விருந்தினராக இருந்தேன் என்பதை அவருக்கு நினைவுபடுத்துகிறேன். (சிரிப்பு).

பீர்க்கன்காரணைப் பஞ்சாயத்து

***368 விஞ.—திரு. முனு ஆதி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தாம்பரத்தை அடுத்த பீர்க்கன்காரணைப் பஞ்சாயத்துக்கான உறுப்பினர்கள் தேர்தல் இது நாள் வரை நடைபெறுமல் இருப்பதன் காரணம் என்ன ?

(இ) இத்தேர்தலை விரைவில் நடத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) பீர்க்கன்காரணை பஞ்சாயத்து உறுப்பினர்கள் தேர்தல் 28-1-1965-ல் நடைபெற இருந்தது. ஆனுல் உயர் நீதி மன்றம் விதித்த ஆணையின் காரணமாக தேர்தல் நடைபெறவில்லை. வழக்கில் உயர் நீதி மன்றம் முடிவான தீர்ப்பு வழங்கிய பின்பு நாட்டில் ஏற்பட்டிருந்த அவசர நெருக்கடி காரணமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் அங்கத்தினர்களின் தேர்தல் நடத்துவது நிறுத்தப் பட்டிருந்தது. இந்த ஆணையை மாற்றி உடனடியாகத் தேர்தல்கள் நடத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

தாம்பரம் நகராட்சி மன்றம்

***369. விஞ.—திரு. முனு ஆதி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) தாம்பரம் நகராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைபெறும் என்று அறிவிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.